

# புஷ்பராசா அண்ணை, நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீகள்!

- சந்துஷ் -

அன்புடன் புஸ்பராசா அண்ணைக்கு,

உங்கள் கடைசிக் கடிதம் கிடைத்தது.

சீனிப்பேணிக்குள் கடிதம் எழுதி வைத்து விட்டுச் சொல்லாமல் இயக்கத்துக்குப் போன பொடியங்களைப்போல கடிதம் வைத்துப் போனது நீங்களும் அடிப்படையில் ஒரு ஈழப் போராளி என்பதை நினைவுபடுத்தவா?

எழுபதுகளின் கடைசியில் பத்திரிகைகளின் தலைப்புகளில் அறியப்பட்ட அதே ஆளெனத் தெரியாமல் எண்பதுகளின் தொடக்கத்தில் MIRJEஇல் வேலை செய்து கொண்டிருந்த என் அப்பாவை சந்திக்க வந்துகொண்டிருந்த பலருள் மெலிந்த முழுக்கை சேட் அணிந்த உருவமாக என் நினைவினில் இருந்த புஸ்ப ராசா அண்ணை; ஐரோப்பாவின் இயக்கக் காலத்தில் நான் புஸ்பராஜாத் தோழர் பேசுகி றேன் என்று தொலைபேசியில் அறிமுகமான புஸ்பராசாண்ணை; இலக்கியச் சந்திப்புகளில் அரசியல், சமூகம், பொருளாதாரம் என்று கருத் துப் பரிமாறிக் கொண்ட புஸ்பராசா அண்ணை;சபாலிங்கத்தின் கொலை தந்த அதிர்வுகளுடன் வரண்டு விடுமோ என்றிருந்த புகலிடத்தின் மாற்றுக் கருத்துச் சுதந்திரத்தை “தோற்றுத்தான் போவோமா” என நெஞ்சை நிமிர்த்தி உயிர்க்கச் செய்வதில் சிதறியிருந்த சின்னச் சின்ன நம்பிக்கைகளையும் துணிவு களையும் கோர்த்தெடுத்த முயற்சியில் மூச்சி றைக்க ஓடித் திரிந்த புஸ்பராசாண்ணை என்று எனக்கு நீங்கள் தமிழரின் அரசியல் வரலாற் றின் ஒரு பரிமாணமாகவே தெரிகிறீர்கள். தேசிய விடுதலையில் தொடங்கி அதன்மீதான சுயவிமர்சனம் அடுத்த கட்டத்திற்கான நகர்வு சகிப்புத் தன்மை மாற்றுக் கருத்தை அங்கீ கரித்தல் போன்ற அம்சங்களை தமிழ் அரசி யலில் இன்றும் இனங்காணக் கூடியதை உங்கள் செயற்பாடுகள் உணர்த்தின.

மிதவாத அரசியலை நீங்கள் நம்பியதை விட அதன் தலைவர்கள்மீது உங்களுக்கிருந்த நம்பிக்கையைப்பற்றிக் காரசாரமான விவாதம் நடத்தியது நினைவிருக்கிறதா?

ஈழப் போராட்டத்தின் வரலாறு ஒற்றைத்தன மானதல்ல என்பதை உங்கள் ‘ஈழப்போராட் டத்தில் எனது சாட்சியம்’ சாட்சி சொன்னது. “நீங்கள் மிதவாதத்தை இறுகத் தழுவிக் கொண்டிருப்பதால் அந்த சாட்சியத்தின் பல இடங்களில் உங்களைக் காணமுடியவில்லை” என என் ஆதங்கத்தைத் தெரிவித்தபோது நீங்கள் கொடுத்த விளக்கங்கள் குறிப்பாக துரையப்பா தொடர்பான கருத்துக்கள் ஒரு ஆழமான விவாதத்திற்கு பயன்படக் கூடியவை.

பெரும் கதையாடல்களுடன் மனிதர்களை இணைத்து முத்திரை குத்துவதைவிட பெருங் கதையாடல்களை ஒவ்வொரு சமூகக் குழுவும் எப்படி மொழிபெயர்த்துக் (interpret) கொள்கிறது என்பதை அவ்விவாதம் புரிய வைத்தது

நீங்கள் தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரு பகுதி. குழந்தைகளை விழுங்கியதால் ஒரு காலத்தையே விழுங்கிய சுனாமிபோல உங் களின் இழப்புடன் அந்த இயங்கலின் தொடர்ச்சி யைக் குறித்து நின்ற அப்பகுதியைக் காலம் விழுங்கிவிட்டது.

கடைசிக் கடிதத்தைக்கூட ஒரு அரசியல் கோரிக்கையாக மாற்ற உங்களால்தான் முடிந் திருக்கிறது.

இக்கடிதத்திற்குப் பதில்போட உங்களுக்கு நேரமிருக்காது. இங்கிருக்கும் நிலைமைகளை நாங்கள் உங்களுக்கு எழுதிக் கொண்டிருப் போம். ஏனெனில், மனித சுதந்திரத்தின் எல்லை கள் குறுக்கப்பட்டு இன்னுமொரு நண்பன் தொலையக் கூடிய ஒரு அபத்தமான சூழலில் உங்கள் செயற்பாடுகள் மூலம் புஸ்பராசா அண்ணை நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்!